AIA நிறுவனத்தால் 2021 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு காப்புறுதிக்காகவும் ரூ.100 இனை இலங்கை புற்று நோயாளர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க வாக்குறுதியளிக்கின்றோம்.

# AIA சுப்பர் புரடெக்டர்

## பரிபூரணமான ஆயுள் காப்புறுதித் தீர்வு



AIA இன்ஷூவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

# நாம் வாழ்க்கை என்று அழைக்கின்ற இப்பயணமானது பல வேறுபட்ட மைற்கற்களைக் கொண்டுள்ளது.

நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு கட்டங்களிலேயே தற்போது இருந்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய அனுபவங்கள், தேவைகள், கனவுகள் மற்றும் அபிலாஷைகள் அனைத்தும் ஒருவருக்கு ஒருவர் வேறுபடுகின்றன. நம்மில் சிலர் இளமையாகவும், சாகச நம்பிக்கையுடன் கவலையற்றவர்களாகவும் இருக்கின்ற அதேவேளை மற்றவர்கள் தங்களுடன் வாழ்க்கையில் ஒன்றாக இருப்பவர்களுக்காக அர்ப்பணிப்பு மிக்கவர்களாகவே இருக்கின்றனர். சிலர் தங்களுடைய குடும்பத்திற்கான மகிழ்ச்சியினை வரவேற்பதற்கு தயாராக இருப்பார்கள் எனினும் மற்றவர்கள் அவர்களின் பணி ஓய்வு பற்றிய கனவினைப் பற்றி உற்சாகமாக இருப்பார்கள். நமது வாழ்க்கை புத்தகத்தில் நாம் எந்த அத்தியாயத்தில் இருக்கிறோம் என்பதைப் பொறுத்தே எமது தேவைகளும் மற்றும் எதிர்பார்ப்புகளும் வேறுபடுகின்றன.

## வாழ்க்கையின் கட்டங்கள் (நிலைகள்)



ஆனால் நாம் எந்த நிலையில் இருந்தாலும், கிட்டத்தட்ட அனைவருக்கும் பொதுவான மற்றும் நிலையான ஒரு விடயம் இருக்கின்றது. அதுதான் குடும்பமாகும். நாம் அதிகமாக அன்பு வைத்திருக்கும் மற்றும் நேசித்துப் பாதுகாக்கும் எமது அன்பிற்குரியவர்களுக்குச் சிறந்தவற்றைத் தவிர வேறொன்றையும் நாம் வேண்டுவதில்லை. அவர்கள் எமது பெற்றோர்கள், எமது பிள்ளைகள், வாழ்க்கைத் துணை போன்றவர்களாகவும் இருக்கலாம், எனினும் உண்மையில் எம் அனைவருக்கும் குடும்பம் ஒன்று இருக்கின்றது. மேலும் அவர்களை மிகவும் நன்றாகப் பார்த்துப் பராமரிப்பது எம்மிலேயே தங்கியுள்ளது...




நீங்கள் வாழ்க்கையில் எந்தவொரு நிலையில் இருந்தாலும், அவர்களுடன் நீங்கள் இனி இல்லை என்கின்ற துரதிஷ்டமான நிகழ்வு இடம்பெறும் நிலையிலும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உங்களது மறைவு அல்லது நீங்கள் அவர்களுடன் தொடர்ந்து இல்லாத நிலையிலும் கூட அவர்கள் பழக்கப்பட்ட வாழ்க்கை முறையினை அவர்கள் தொடர்ந்தும் வாழ்வதற்கு அவர்களின் நிதியியல் ரீதியான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

# உங்களிடம் வேறு கருத்துக்களும் இருக்கலாம்...



# எனினும் உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பது நீங்கள் பிற்போட வேண்டிய ஒரு விடயம் என்று நீங்கள் உண்மையில் நினைக்கின்றீர்களா?

## வாழ்க்கை எவ்வளவு பலவீனமாக இருக்கும் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்...

இலங்கையில் சாலைப் போக்குவரத்து விபத்துக் காரணமாக **ஒவ்வொரு நாளும் சுமார் 8 பேர் இறக்கின்றனர்.**

உலகில் சாலைப் போக்குவரத்து விபத்துக் காரணமாக **ஒவ்வொரு வருடமும் 1.25 மில்லியன் மக்கள் இறக்கின்றனர்.**



Source: www.themorning.lk/safe-roads-and-reducing-accidents/

2020 இன் கடந்த 06 மாதங்களில் **8880 மோட்டார் வாகன விபத்துகள்** பதிவாகியுள்ளன.

அதிக எண்ணிக்கையான இறப்புகள் **மோட்டார் சைக்கிள்** ஓட்டுநர்களெனப் பதிவாகியுள்ளன.

இரண்டாவது அதிக எண்ணிக்கையான இறப்புகள் **பாதசாரிகளெனப்** பதிவாகியுள்ளன.

## அத்துடன் இதையும் மறக்க வேண்டாம்:



இலங்கையில் **75%** மான இறப்புகள் **தொற்றா நோய்களினாலேயே** ஏற்படுகின்றன.



இலங்கையில் தொற்றா நோய்களில் **35%** இறப்புகள் **இதய நோய்களினால்** ஏற்படுகின்றன.



**முதல் 20 இல் 15** மரணங்கள் நோய்களினாலேயே ஏற்படுகின்றன.



**வைத்தியசாலை அனுமதிச் செலவுகள்** தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

# AIA சுப்பர் புரடெக்டர்

## உங்களையும் மற்றும் உங்களின் அன்பிற்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட மிகவும் பரிபூரணமான ஆயுள் காப்புறுதித் திட்டமாகும்.

AIA சுப்பர் புரடெக்டர் உங்களுடைய பாதுகாப்புத் தேவைகளுக்காக மிகவும் கட்டுப்படியான கட்டுப்பணங்களில் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வொன்றாகும். AIA சுப்பர் புரடெக்டர் திட்டத்துடன், உங்கள் தனிப்பட்ட தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் 6 விருப்பத் தெரிவு அனுகூலங்களுடன் நீங்கள் பெறக்கூடிய பாதுகாப்பை நீங்கள் தனிப்பயனாக்க முடியும். நீங்கள் வாழ்க்கையில் எந்தவொரு நிலையில் இருந்தாலும் உங்களுக்கும் மற்றும் உங்களின் அன்பிற்குரியவர்களுக்குமான மிகச்சிறந்த நிதியியல் பாதுகாப்பை நாம் வழங்குவோம்.

## AIA சுப்பர் புரடெக்டர் திட்டத்தின் அனுகூலங்கள்

கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்

37 பாரதூரமான நோய் அனுகூலம்

குடும்ப வருமான அனுகூலம்

கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலம்

நிரந்தரமான இயலாமை அனுகூலம்

விபத்து மூலமான மரண அனுகூலம்



அதிகரிக்கும் ஆயுள் அனுகூலம்

# 5%

## உங்களுக்குத் தெரியுமா?

**உங்கள் மாறிவரும் வாழ்க்கை முறைத் தேவைகள், வருமான நிலைகள், மற்றும் செலவுகள் போன்றவற்றை ஈடுசெய்வதற்காக உங்களுடைய ஆயுள் அனுகூலம் ஒவ்வொரு வருடமும் 5% இனால் அதிகரிக்கின்றது.**

## அதிகரிக்கும் ஆயுள் அனுகூலம்



இயற்கையாக உங்களுக்கு மரணம் சம்பவிக்குமானால் உங்கள் பயனாளிகள் ஆயுள் அனுகூலத்தினைப் பெறுவார்கள்.

ஆயுள் அனுகூலமானது காப்புறுதிக் காலத்தின் நிறைவு வரை அல்லது மரண இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்று கோரப்படும் வரை எளிய நேர்கோட்டு அடிப்படையில் ஒவ்வொரு காப்புறுதித் திட்ட வருடாந்தப் பூர்த்தியின் போது 5% இனால் அதிகரிக்கப்படும்.

**ரூபா.1 மில்லியன் மற்றும் ரூபா. 500 மில்லியனிற்கு இடையில் ஆயுள் அனுகூலத் தொகையினைத் தெரிவு செய்யலாம்.**

## அதிகரிக்கும் ஆயுள் அனுகூலம் - உதாரணம்:



- ஆயுள் காப்புறுதிதாரரின் வயது 35 **வருடங்கள்**
- ஆயுள் காப்பீடு **ரூபா. 20 மில்லியன்**
- காப்புறுதிக் காலம் **20 வருடங்கள்**

**மரணமானது 11வது வருடத்தில் சம்பவிக்குமானால்**

**அதிகரிக்கும் ஆயுள் அனுகூலம்**

ரூபா. 20 மில்லியன் பெறுமதியான ஆயுள் காப்பீடு வருடாந்தம் (ரூபா. 1 மில்லியன்) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 11வது வருடத்தில் ஆயுள் அனுகூலமானது ரூபா. 30 மில்லியனாக இருக்கும்.



1 **ரூபா. 30 மில்லியன்** பெறுமதியான ஆயுள் காப்பீடு பயனாளிகளுக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.



# விருப்பத்தெரிவு அனுகூலங்கள்



## நீங்கள் இதைப்பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கின்றீர்களா?

விபத்து அல்லது நோய் காரணமாக துரதிஷ்டமான மரணம் அல்லது முழுமையான நிரந்தர இயலாமை (TPD) உங்களுக்கு ஏற்படுமானால் உங்களுடைய குடும்பத்தின் நிதியியல் தேவைகளை யார் பார்த்துக் கொள்வார்கள்?




## குடும்ப வருமான அனுகூலம் (விருப்பத்தெரிவு)

விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் நீங்கள் மரணித்தால் அல்லது முழுமையான நிரந்தரமான இயலாமையினால் பாதிக்கப்பட்டால் (TPD) அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்த வருமானம் ஒன்றை உங்கள் பயனாளிகள் பெறுவார்கள்.

---

ரூபா. 10,000 மற்றும் அதற்கு மேலான தொகை ஒன்றிலிருந்து உங்கள் குடும்பத்திற்குத் தேவைப்படும் மாதாந்த வருமானத் தொகையினை நீங்கள் தெரிவு செய்ய முடியும்.

---

**உங்கள் காப்புறுதித் திட்டத்தின் ஆரம்பத்திலுள்ள குடும்ப வருமான அனுகூலத் தொகையானது மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தக்கூடியதாக மாறும் வரையில் ஒவ்வொரு காப்புறுதித் திட்ட வருடாந்தப் பூர்த்தியில் 5% இனால் (எளிய நேர்கோட்டு அடிப்படையில்) அதிகரிக்கப்படும்.**



# குடும்ப வருமான அனுகூலங்கள்

## உதாரணம்: (துரதிஷ்டமான மரணம் காரணமாக)



ஆயுள் காப்புறுதிதாரரின் வயது **35 வருடங்கள்**

FIB மாதாந்த வருமானம் **மாதத்திற்கு ரூபா. 200,000**

ஆயுள் காப்பீடு **ரூபா. 20 மில்லியன்**

காப்புறுதிக் காலம் **20 வருடங்கள்**

**மரணம் 11 வது வருடத்தில் நிகழ்ந்தால்**

**அதிகரிக்கப்பட்ட குடும்ப வருமான அனுகூலம்**

ரூபா. 200,000 வருடாந்தம் (ரூபா. 10,000) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 11 வது வருடத்தில் FIB ரூபா. 300,000 ஆக இருக்கும்.



**2** **அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா. 300,000 செலுத்தப்படும்** **ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக (ரூபா. 30 மில்லியன்)**




ரூபா. 20 மில்லியன் வருடாந்தம் (ரூபா. 1மில்லியன்) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 10 வது வருடத்தில் ஆயுள் அனுகூலமானது ரூபா. 30 மில்லியனாக இருக்கும்.



**1** **ரூபா. 30 மில்லியன்** பெறுமதியான ஆயுள் அனுகூலம் பயனாளிகளுக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.



## உங்களுக்குத் தெரியுமா?

**AIA சுப்பர் புரடெக்டர் திட்டமானது உங்களுடைய பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி காப்புறுதிக் காலத்தின் இறுதியில் செலுத்தப்பட்ட அனைத்துக் கட்டுப்பணங்களையும் பெறுவதற்கு உங்களை அனுமதிக்கின்றது?**

**இந்தத் தெரிவானது செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல் தெரிவுடன் AIA சுப்பர் புரடெக்டர் திட்டத்தினை நீங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைக்கப்பெறும்.**



### நிரந்தர இயலாமை அனுகூலங்கள் (விருப்பத்தெரிவு)

முழுமையான நிரந்தரமான இயலாமை - விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் முழுமையான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட அனுகூலத் தொகையினை நீங்கள் பெறுவீர்கள்.

பகுதியளவான நிரந்தரமான இயலாமை - விபத்தொன்றின் மூலமாக பகுதியளவான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால், உங்கள் காப்புறுதித் திட்ட ஆவணத்திலுள்ள அனுகூலங்களின் அட்டவணையின் அடிப்படையிலுள்ள அனுகூலத் தொகை வரை நீங்கள் பெறுவீர்கள்.



### பாரதூரமான நோய் அனுகூலம் (விருப்பத்தெரிவு)

நீங்கள் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு 37 பாரதூரமான நோய்களினால் நோய்க்குணங்குறி கண்டறியப்பட்டால் அல்லது சத்திரசிகிச்சைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தால் உங்களுக்கு அனுகூலத் தொகை செலுத்தப்படும்.



### செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலம் (விருப்பத்தெரிவு)

காப்புறுதிக் காலத்தில் நீங்கள் உயிருடன் இருந்தால் காப்புறுதிக் காலத்தின் இறுதியில் நீங்கள் செலுத்திய அனைத்துக் கட்டுப்பணங்களையும் AIA உங்களுக்கு திருப்பிச் செலுத்தும்.

காப்புறுதிக் காலத்தின் போது நீங்கள் மரண இழப்பீட்டுக் கோரிக்கையைத் தவிர வேறு எந்தவொரு இழப்பீட்டுக் கோரிக்கையினை ஏற்படுத்தியிருந்தாலும் இந்த அனுகூலமானது உங்களுக்குச் செலுத்தப்படும்.



### கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் (விருப்பத்தெரிவு)

விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் முழுமையான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால் உங்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதிக் காலத்தின் இறுதி வரையில் AIA உங்கள் சார்பாக கட்டுப்பணங்களைச் செலுத்தும்.



### விபத்து மூலமான மரண அனுகூலம் (விருப்பத்தெரிவு)

விபத்தொன்று காரணமாக துரதிஷ்டமான மரணம் சம்பவிக்குமானால், பயனாளிகள் ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக விபத்து மூலமான மரண அனுகூலத் தொகையினைப் பெறுவார்கள்.

ஆயுள் அனுகூலத்தின் அதிகபட்ச 2 மடங்கு காப்பீட்டுத் தொகையினைத் தெரிவு செய்ய முடியும். குறைந்தபட்சத் தொகையானது ஆரம்ப ஆயுள் அனுகூலத்திற்குச் சமமான தொகையாக இருக்கும்.

# எவ்வாறு AIA சுப்பர் புரடெக்டர் திட்டம் செயற்படுகின்றது என்பதற்கான உதாரணம்

**தரிண்துவின் வயது 35 ஆகும் (அவரது அடுத்த பிறந்த தினத்தில்). அவர் திருமணம் செய்து தனது முழுமையான வாழ்க்கையை தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வாழ்கின்றார்.**

கட்டுப்பணத்தைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலத்துடன் இவர் AIA சுப்பர் புரடெக்டர் காப்பீட்டுத் திட்டம் ஒன்றினை கீழ்வரும் அனுகூலங்களுடன் கொள்வனவு செய்திருந்தார்.

## உதாரணம்: 'செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல்' உடன்



வயது: 35

காப்புறுதிக் காலம்: **25 வருடங்கள்**

**ஆயுள் அனுகூலம் ரூபா 5 மில்லியன்**

+

**தெரிவு செய்யப்பட்டுள்ள விருப்பத்தெரிவு அனுகூலங்கள்**

- செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல அனுகூலம்
- நிரந்தரமான இயலாமை அனுகூலம் **(ரூபா. 5 மில்லியன்)**
- கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்
- விபத்து மூலமான மரணக் காப்பீடு **(ரூபா. 5 மில்லியன்)**
- குடும்ப வருமான அனுகூலம் **(மாதம் ஒன்றுக்கு ரூபா.50,000)**

வருடாந்தக் கட்டுப்பணம் **(ரூபா. 120,554)**

## காப்புறுதிக் காலத்தின் போது எவ்வாறு AIA சுப்பர் புரடெக்டர் பிளக்சி திட்டம் தரிண்துவிற்கு உதவியிருந்தது?

**தரிண்து 11வது வருடத்தில் முழுமையான நிரந்தரமான இயலாமைக்குட்பட்டால் AIA சுப்பர் புரடெக்டர் காப்புறுதித் திட்டத்திடமிருந்து கீழ்வரும் அனுகூலங்களைப் பெறுவார்**

**அதிகரிக்கப்பட்ட குடும்ப வருமான அனுகூலம்**

ரூபா. 50,000 வருடாந்தம் (ரூபா. 2,500) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 10வது வருடத்தில் FIB ரூபா. 75.000 ஆக இருக்கும்.






**2** **அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா. 75,000 செலுத்தப்படும். நிரந்தரமான இயலாமை அனுகூலத்திற்கு மேலதிகமாக (ரூபா. 5 மில்லியன்)**



**1** **ரூபா. 5 மில்லியன் பெறுமதியான நிரந்தரமான இயலாமை அனுகூலம்** பயனாளிகளுக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.



**3** மீதமுள்ள காப்புறுதிக் காலத்திற்காக உங்கள் சார்பாக AIA **கட்டுப்பணத்தைச் செலுத்தும்.**



**4** நீங்கள் செலுத்திய அனைத்து கட்டுப்பணங்களையும் AIA **உங்களுக்குத் திருப்பிச் செலுத்தும்.**

**ரூபா. 2,820,350** (ரூபா. 112,814x25)

கீழ்வரும் விருப்பத்தெரிவு அனுகூலங்களுடன் கட்டுப்பணங்களை திருப்பிச் செலுத்தல் அனுகூலமின்றி AIA சுப்பர் புரடெக்டர் திட்டமொன்றை தரிண்டு கொள்வனவு செய்திருந்தால்

# உதாரணம்: தவணைக் காலம்



வயது: 35

காப்புறுதிக் காலம்: 25 வருடங்கள்

**ஆயுள் அனுகூலம் ரூபா 5 மில்லியன்**

+

**தெரிவு செய்யப்பட்டுள்ள விருப்பத்தெரிவு அனுகூலங்கள்**

- கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்
- நிரந்தரமான இயலாமை அனுகூலம் **(ரூபா. 5 மில்லியன்)**
- 37 பாரதூரமான நோய் அனுகூலம் **(ரூபா. 2 மில்லியன்)**
- விபத்து மூலமான மரணக் காப்பீடு **(ரூபா. 5 மில்லியன்)**
- குடும்ப வருமான அனுகூலம் **(மாதம் ஒன்றுக்கு ரூபா.50,000)**

வருடாந்தக் கட்டுப்பணம் **(ரூபா. 65,738)**

## காப்புறுதிக் காலத்தின் போது எவ்வாறு AIA சுப்பர் புரடெக்டர் திட்டம் தரிண்டுவிற்கு உதவியிருந்தது

**தரிண்டு 3 ஆவது வருடத்தில் பாரதூரமான நோயினால் நோய் ஆய்வுறுதி செய்யப்பட்டு 11 வது வருடத்தில் அவருக்கு மரணம் நிகழ்ந்தால்**

**அதிகரிக்கப்பட்ட குடும்ப வருமான அனுகூலம்**

ரூபா. 50,000 வருடாந்தம் (ரூபா. 2,500) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 10வது வருடத்தில் FIB ரூபா. 75,000 ஆக இருக்கும்.






**3** அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா. 75,000 செலுத்தப்படும். நிரந்தரமான இயலாமை அனுகூலத்திற்கு மேலதிகமாக (ரூபா. 5 மில்லியன்)



**1** **ரூபா. 2 மில்லியன் பெறுமதியான பாரதூரமான நோய் அனுகூலம்** உங்களுக்குச் செலுத்தப்படும்.



**2** **ரூபா. 7.5 மில்லியன் பெறுமதியான ஆயுள் அனுகூலம்** பயனாளிகளுக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.

**அதிகரிக்கப்பட்ட ஆயுள் அனுகூலம்**

ரூபா. 5 மில்லியன் வருடாந்தம் (ரூபா. 250,000) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 10வது வருடத்தில் ஆயுள் அனுகூலமானது ரூபா. 7.5 மில்லியனாக இருக்கும்.



# ஏனைய முக்கியமான காப்புறுதித் திட்டத் தகவல்கள்

<table>
<tr><td>காப்புறுதிக் காலம்/ கட்டுப்பணம் செலுத்தல் காலம்</td><td>10 வருடங்கள்</td><td>15 வருடங்கள்</td><td>20 வருடங்கள்</td><td>25 வருடங்கள்</td><td>30 வருடங்கள்</td></tr>
<tr><td>கட்டுப்பண முறை</td><td colspan="5">வருடாந்தம், அரையாண்டாக, காலாண்டாக, மாதாந்தமாக</td></tr>
</table>

<table>
<tr><td rowspan="3">நுழைவு வயதுகள் மற்றும் காப்பீட்டினை முடிவுறுத்தும் வயதுகள் (அடுத்த பிறந்த தினத்தில்)</td><td></td><td>குறைந்தபட்ச நுழைவு வயது (அடுத்த பிறந்த தினத்தில்)</td><td>அதிகபட்ச நுழைவு வயது (அடுத்த பிறந்த தினத்தில்)</td><td>காப்பீட்டை முடிவுறுத்தும் வயது</td></tr>
<tr><td>ஆயுள் அனுகூலம்</td><td>19 வருடங்கள்</td><td>66 வருடங்கள்</td><td>75 வருடங்கள்</td></tr>
<tr><td>விருப்பத்தெரிவு அனுகூலங்கள்</td><td>19 வருடங்கள்</td><td>66 வருடங்கள்</td><td>75 வருடங்கள்</td></tr>
<tr><td>செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலம்</td><td colspan="4">நீங்கள் 25 மற்றும் 30 வருடங்களாக காப்புறுதிக் காலங்களைத் தெரிவு செய்தால் மட்டுமே இது உங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்</td></tr>
</table>

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## 1. AIA சுப்பர் புரடெக்டர் காப்புறுதித் திட்டம் என்றால் என்ன?

AIA சுப்பர் புரடெக்டர் பிளக்சி காப்புறுதித் திட்டமானது உங்களுடைய பாதுகாப்புத் தேவைகளுக்கு வரையறையான கட்டுப்பணச் செலுத்தல் காலங்களுடன் மிகவும் சிக்கனமான ஆயுள் காப்புறுதித் தீர்வொன்றாகும். இது மிகவும் பரிபூரணமான காப்பீட்டுத் தீர்வினை உங்களுக்கு வழங்குவதற்காக மேலதிகமான அனுகூலங்களையும் உள்ளடக்குகின்றது.

## 2. சுப்பர் புரடெக்டர் காப்புறுதித் திட்டமானது எனக்கு எதனைக் காப்பிடுகின்றது?

AIA சுப்பர் புரடெக்டர் திட்டமானது உங்கள் தேவைக்கேற்ப காப்புறுதித் திட்டத்தினை நீங்கள் தனிப்பயனாக்கிப் பயன்படுத்தும் வகையில் ஆறு விருப்பத்தெரிவு அனுகூலங்களுடனான ஆயுள் காப்புறுதி அனுகூலமொன்றுடன் வழங்கப்படுகின்றது. ஆறு விருப்பத் தெரிவு அனுகூலங்கள் கீழுள்ளவாறு.

a) விபத்து மூலமான மரண அனுகூலம்

b) நிரந்தரமான இயலாமை அனுகூலம்

c) குடும்ப வருமான அனுகூலம்

d) பாரதூரமான நோய் பிளஸ் அனுகூலம்

e) கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்

f) செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களை திருப்பிச் செலத்தல் அனுகூலம்

## 3. என்னிடம் ஏற்கனவே சேமிப்புகள் இருக்கின்றன ஆகவே எதற்காக இது எனக்கு வேண்டும்?

நம்மைச் சுற்றியுள்ள சூழல் பல எதிர்பாராத சூழ்நிலைகளில் நிச்சயமற்றதாகவே இருக்கக்கூடும், இவ்வாறான நிலை எம் வாழ்வில் ஏற்படவும் கூடும். உங்களுக்கு நோய் அல்லது மரணம் சம்பவிக்கும் போது உங்களுக்கோ அல்லது உங்கள் அன்பிற்குரியவர்களுக்கோ போதுமான நிதியியல் பாதுகாப்பொன்று நிச்சயமாகத் தேவைப்படும். இதன்போது உங்களிடம் ஆயுள் காப்புறுதித் திட்டமொன்று இல்லை எனின் நீங்கள் மிகவும் கடினமாக உழைத்த சேமிப்புப் பணம் முழுவதையும் செலவு செய்ய

வேண்டியிருக்கும். ஆகவே தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் பாதுகாப்புத் தீர்வொன்றினை வைத்திருப்பதென்பது நம் எவருக்கும் மிகவும் இன்றியமையாததாகும். AIA சுப்பர் புரடெக்டர் திட்டமானது இலங்கையில் உள்ள மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றாகும். உங்களுக்கு உண்மையில் அதிகமான தேவையொன்று ஏற்படும் போது உங்களுக்கும் மற்றும் உங்கள் குடும்பத்திற்கும் நிதியியல் ரீதியான பாதுகாப்பை வழங்கி உறுதிப்படுத்துகின்றது.

## 4. ஆயுள் காப்புறுதி அனுகூலத்துடன் இணைந்தவாறு விபத்து மூலமான மரண அனுகூலத்தினைப் பெறுவது சாத்தியமானதா?

ஆம். உங்களுடைய ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கு நீங்கள் விபத்து மூலமான மரண அனுகூலத் தெரிவினைச் சேர்க்க முடியும். விபத்தொன்று மூலமாக துரதிஷ்டமான மரணம் சம்பவிக்குமானால், உங்கள் பயனாளிகள் ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக விபத்து மூலமான மரண அனுகூலத் தொகையினைப் பெறுவார்கள்.

## 5. காப்புறுதிக் காலத்தின் நிறைவு வரையில் ஆயுள் அனுகூலத்தின் 5% அதிகரிப்புத் தொடருமா?

ஆயுள் அனுகூல அதிகரிப்பானது ஒவ்வொரு காப்புறுதித் திட்ட வருடாந்தப் பூர்த்தியின் போது எளிய நேர்கோட்டு அடிப்படையில் 5% இனால் அதிகரிக்கப்படும். இது காப்புறுதிக் காலத்தின் நிறைவு வரை அல்லது மரண இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்று கோரப்படும் வரையில் தொடரும். துரதிஷ்டமாக மரணம் நிகழும் போது அதிகரிப்புடன் கூடிய மொத்த ஆயுள் காப்பீடானது உங்களுடைய பயனாளிகளுக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.

## 6. எவ்வாறான நிபந்தனையின் கீழ் நிரந்தரமான இயலாமை அனுகூலத்திற்கான இழப்பீட்டை நான் கோர முடியும்?

விபத்து அல்லது நோய் காரணமாக நீங்கள் முழுமையான நிரந்தரமான இயலாமைக்காளாகினால் தெரிவு செய்யப்பட்ட அனுகூலத் தொகையினை நீங்கள் பெறுவீர்கள். எவ்வாறாயினும் விபத்தினால் மட்டும் பகுதியளவான நிரந்தரமான இயலாமை ஏற்படும் போது பகுதியளவான நிரந்தரமான இயலாமை அனுகூலம் செலுத்தப்படும். காப்புறுதித் திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூலங்களின் அட்டவணையின் அடிப்படையில் நீங்கள் அனுகூலத் தொகையினைப் பெறுவீர்கள்.

## 7. எனது பணி அல்லது கல்வி விடயமாக நான் வெளிநாடொன்றுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டால் என்னால் AIA சுப்பர் புரடெக்டர் திட்டமொன்றை பெற முடியுமா மற்றும் நான் வெளிநாட்டில் இருக்கும் போது எனக்கு ஏற்படும் எந்தவொரு தேவைகளுக்கும் என்னால் இழப்பீட்டைக் கோர முடியுமா?

ஆம், காப்புறுதித் திட்டத்தினை நீங்கள் கொள்வனவு செய்யும் போது இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜையாக இருப்பீர்கள் எனின் உங்களால் காப்புறுதித் திட்டத்தினைப் பெற முடியும். எவ்வாறாயினும் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள் இலங்கை ரூபாவிலேயே உங்களுக்குச் செலுத்தப்படும். நீண்ட காலத்திற்கு வெளிநாடு ஒன்றுக்கு செல்லவிருக்கும் தனது நோக்கத்தை ஆயுள் காப்புறுதிதாரர் நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

## 8. காப்புறுதிக் காலத்தின் போது ஆயுள் காப்புறுதிதாரர் இறக்க நேர்ந்தால் யாது நடைபெறும்?

a) பயனாளிகள் அதிகரிக்கப்பட்ட ஆயுள் அனுகூலப் பெறுமதியினை உடனடியாகப் பெறுவார்கள்.

b) நீங்கள் குடும்ப வருமான அனுகூலத்திற்காகத் தெரிவு செய்திருந்தால் பயனாளிகள் அதிகரிக்கப்பட்ட மாதாந்த வருமானம் ஒன்றை அடுத்த 5 வருடங்களுக்காகப் பெறுவார்கள்.

## 9. ஆயுள் காப்புறுதிதாரர் முழுமையான நிரந்தரமான இயலாமைக்குட்பட்டு மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலத்துடன் இணைந்தவாறு குடும்ப வருமான அனுகூலத்தினைத் தெரிவு செய்திருந்தால் யாது நிகழும்?

a) நிரந்தரமான இயலாமை அனுகூலம் காப்புறுதிதாரருக்கு உடனடியாகச் செலுத்தப்படும்.

b) பயனாளிகள் அதிகரிக்கப்பட்ட மாதாந்த வருமானம் ஒன்றை அடுத்த 5 வருடங்களுக்காகப் பெறுவார்கள்.

c) மீதமுள்ள காப்புறுதிக் காலத்திற்காக காப்புறுதிதாரர் சார்பாக AIA கட்டுப்பணத்தைச் செலுத்தும். மேலும் காப்புறுதிதாரர் செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களின் திருப்பிச் செலுத்தல் அனுகூலத்தினை தெரிவு செய்து மற்றும் காப்புறுதிக் காலத்தில் ஆயுள் காப்புறுதிதாரர் உயிருடன் இருந்தால் காப்புறுதிக் காலத்தின் முடிவில் அனைத்துக் கட்டுப்பணங்களும் காப்புறுதிதாரருக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

## 10. AIA சுப்பர் புரடெக்டர் திட்டத்துடன் இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு எனக்கான காத்திருப்புக் காலம் ஒன்று இருக்குமா?

ஆயுள் மற்றும் விபத்து அனுகூலங்கள் காப்புறுதித் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே (மீள்நிறுவலிலிருந்து) உடனடியாக நடைமுறைக்கு வரும். உங்கள் AIA சுப்பர் புரடெக்டர் திட்டத்திற்கு சேர்க்கப்பட்டுள்ள விருப்பத்தெரிவு அனுகூலங்களுக்காகக் காத்திருப்புக் காலங்கள் ஏற்புடையதாக இருக்கும். உதாரணமாக, பாரதூரமான நோய் அனுகூலத்தின் கீழ் இழப்பீடு ஒன்றைக் கோருவதற்கு காப்புறுதித் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து (அல்லது மீள்நிறுவலிலிருந்து) 90 நாட்கள் காத்திருப்புக் காலமாக இருக்கும். மேலதிக விபரங்களுக்காக உங்கள் AIA வெல்த் பிளேனர், நிதியியல் திட்டமிடல் அதிகாரி அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட தரகரிற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள்.

## 11. சுப்பர் புரடெக்டர் காப்புறுதித் திட்டமொன்றை எவ்வாறு நான் கொள்வனவு செய்ய முடியும்?

நீங்கள் உங்கள் AIA வெல்த் பிளேனர், AIA நிதியியல் திட்டமிடல் அதிகாரி அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட தரகரினைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது எங்களை 0112 310 310 இனூடாக அழையுங்கள்.

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

இந்தக் காப்புறுதித் திட்டத்தினை உரிமம் பெற்ற AIA வெல்த் பிளேனர், AIA நிதியியல் திட்டமிடல் அதிகாரி அல்லது அங்கீகாரம் பெற்ற தரகர் ஒருவரிடமிருந்து மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களுடைய விருப்பத் தெரிவிற்கு ஏற்றவாறு காப்புறுதித் திட்டம் ஒன்றை மற்றும்/அல்லது காப்புறுதி வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான உரிமையையும் மற்றும்/அல்லது வங்கி ஒன்றினால் அல்லது வேறு எந்தவொரு நிதியியல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு நிதியியல் திட்டங்கள் அல்லது சேவைகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டு அல்லது தொகுக்கப்பட்டு வழங்கப்படுகின்ற எந்தவொரு காப்புறுதித் திட்டத்தினையும் மறுப்பதற்கான உரிமையையும் நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள்.

இது காப்புறுதித் திட்டத்தின் கண்ணோட்டம் மட்டுமே ஆகும். நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும். முழுமையான காப்புறுதித் திட்டம் தொடர்பான விபரங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குத் தயவு செய்து காப்புறுதி ஆவணத்தை வாசிக்கவும். காப்புறுதித் திட்டத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பிரகடனங்களை விரிவாக விளக்கும் உங்கள் முன்மொழிவுப் படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உங்களுக்கு விற்பனை விளக்கம் மற்றும் விலைமனு ஒன்று வழங்கப்படும்.

SP - 300000397
V2 - 07/21

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இனால் வெளியிடப்பட்டது. 07/12/2021

HEALTHIER, LONGER,
BETTER LIVES